# 06 சேர்ந்து வாழ்வோம்

நமது நாடு இலங்கை. இலங்கை பழைமை மிகுந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. எமது நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், மலாயர் ஆகிய இனத்தவர்கள் வாழ்கிறார்கள். நம் நாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்கள் உள்ளன.



எல்லாச் சமயங்களும் தர்மத்தையே போதிக்கின்றன. உண்மை பேசுதல், பிற உயிர்களிடம் அன்பு காட்டுதல், தன்னைப் போலவே பிறரையும் மதித்து நேசித்தல், விட்டுக் கொடுத்தல் போன்றவை தர்ம போதனைகளாகும்.



இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம், மலாய் ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன. மொழி உறவுகளை வளர்க்கும், புரிந்துணர்வை உருவாக்கும், ஒருவர் பேசும் மொழி மற்றவருக்குப் புரிய வேண்டும். எனவே, சிங்களம் தெரிந்தவர் தமிழ் படிக்க வேண்டும். தமிழ் தெரிந்தவர் சிங்களம் படிக்க வேண்டும். பல இனங்கள், பல மதங்கள், பல மொழிகள் கொண்ட எமது இலங்கைத் திரு நாட்டில் நாம் ஒன்றுபட்டு வாழ்வோம். வேற்றுமைகளைக் களைவோம்.



## செயற்பாடு 01

விடை எழுதுவோம்.
පිළිතුරු ලියන්න.

**இலங்கையில் பேசும் மொழிகள்**

- சிங்களம்
- தமிழ்
- ஆங்கிலம்

**இலங்கையில் உள்ள இனங்கள்**

- 
- 
- 
- 

**இலங்கையில் உள்ள சமயங்கள்**

- 
- 
- 
- 

**தர்ம போதனைகள்**

- 
- 
- 



## செயற்பாடு 02

**பேசிப் பழகுவோம்.**
**කඩ නගා කියවන්න.**

| நிகழ்காலம் | எதிர்காலம் |
| --- | --- |
| நடிக்கிறேன் | நடிப்பேன் |
| படிக்கிறேன் | படிப்பேன் |
| குடிக்கிறேன் | குடிப்பேன் |
| சாப்பிடுகிறேன் | சாப்பிடுவேன் |
| வருகிறேன் | வருவேன் |
| போகிறேன் | போவேன் |
| சிரிக்கிறேன் | சிரிப்பேன் |
| எழுதுகிறேன் | எழுதுவேன் |
| ஆடுகிறேன் | ஆடுவேன் |

நான் பாடம் படிக்கிறேன்.
நான் பாடம் படிப்பேன்.

நான் இன்று பாடம் படிக்கிறேன்.
நான் நாளை பாடம் படிப்பேன்.

இன்று நான் பால் குடிக்கிறேன்.
நாளை நான் பால் குடிப்பேன்.

இன்று நான் வீட்டிற்குப் போகிறேன்.
நாளை நான் வீட்டிற்குப் போவேன்.



**பாட ஆசிரியருக்கான குறிப்பு**

இதே போன்று பாட ஆசிரியர் வினா வடிவங்களை உருவாக்கிப் பேசப் பழக்குவதோடு காலங்கள் பற்றிய தெளிவையும் கொடுத்தல் அவசியம்.



## செயற்பாடு 03

**பின்வரும் இடைவெளிகளைப் பொருத்தமான முடிக்கும் சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துவோம்.**
**සුදුසු ක්‍රියා පද යොදා දී ඇති වාක්‍යවල හිස්තැන් පුරවන්න.**

1. நான் இப்பொழுது தண்ணீர் ..............................................
2. நாளை நான் பால் ............................................................
3. நாங்கள் இன்று நடனம் ...................................................
4. நாங்கள் நாளை நடனம் ...................................................
5. நாங்கள் இப்பொழுது பாடம் ............................................
6. நாங்கள் நாளை பாடம் ...................................................



## செயற்பாடு 04

**பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான வினைச் சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துவோம்.**
**සුදුසු ක්‍රියා පද යොදා හිස්තැන් පුරවන්න.**

| | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | படிக்கிறோம் | படிப்போம் |
| 1. | அடிக்கிறோம் | ....................................... |
| 2. | ....................................... | குடிப்பேன் |
| 3. | எழுதுகிறேன் | ....................................... |
| 4. | ஓடுகிறேன் | ....................................... |
| 5. | ஆடுகிறோம் | ....................................... |
| 6. | ....................................... | எழுதுவேன் |
| 7. | ....................................... | நடப்போம் |
| 8. | ....................................... | பார்ப்பேன் |
| 9. | ....................................... | ஓடுவேன் |
| 10. | ....................................... | சிரிப்போம் |



## செயற்பாடு 05

**சரியான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்வோம்.**
**නිවැරදි ක්‍රියා පද තෝරමු.**

1. எமது ஊரில் குளம் (இருக்கின்றன / இருக்கின்றது).
2. நமது நாட்டில் மலைகள்
   (காணப்படுகின்றது / காணப்படுகின்றன).
3. உமது வீட்டில் பூனை
   (இருக்கின்றதா? / இருக்கின்றனவா?)
4. எங்கள் வகுப்பில் நாற்பது மாணவர்கள்.
   (படிக்கின்றோம் / படிக்கின்றனர்).
5. எங்கள் பாடசாலையில் இன்று விளையாட்டுப் போட்டி.
   (நடைபெறுகின்றது / நடைபெறுகின்றன)